O.S.No.47/2016

**DW.1** சன் லாவண்யன்

02-12-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கும், வாதிக்கும் இடையே டிசம்பர் 2014 ல் ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் 45 நாட்களுக்குள் வேலையை முடிக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த ஒப்பந்தத்திலேயே டைடல் பார்க்கில் M E P சான்று பெற்ற பின்னரே வேலையை தொடங்க முடியும் என்றும், அதன் பின்னர்தான் நாங்கள் வேலைக்குண்டான பொருட்களை உள்ளே கொண்டு செல்ல முடியும். ஆனால் அந்த விவரத்தை ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால், சரிதான். ஆனால் MEP என்பதை வேறு விதமாக நான் குறிப்பிட்டுள்ளேன். தற்பொழுது M E P என்பதனை Tax Exemption என்று குறிப்பிடுகிறார். எனது பதிலுரையில் Tax Exemption ஐ பற்றி நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் குறிப்பிட்டுள்ளேன். பி.வா.சா.ஆ.1 ல் வாதியின் ஒப்புதல் இல்லை என்று சொன்னால் சரிதான். ஒப்பந்தத்தின் ஆரம்ப மதிப்பு ரூ.45 லட்சம் என்று சொன்னால் சரிதான். ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாதியிடமிருந்து இரண்டு தவணைகளில் ரூ.24 லட்சம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் வாதி எனக்கு ஒரு மெயில் அனுப்பியுள்ளார்

என்றால் சரிதான். மேற்படி ஈ மெயிலில் நான் பெற்ற தொகைக்கு பார்டீஷன் சுவற்றை தவிர எந்த வேலையையும் நான் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. 45 நாட்களுக்குள் முடிக்க வேண்டிய வேலையை ஏப்ரல் 2015 வரை நான் முடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்தத்தின் அடிப்படையில் எனது வேலையை நான் முழுமையாக முடித்து விட்டேன் என்று காட்டுவதற்கு நான் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏ.சி வேலையை நான் செய்யாத காரணத்தினால் வாதி வேறு ஒரு ஒப்பந்தக்காரரை நியமித்து ரூ.4,86,000/- செலவு செய்து ஏ.சி வேலையை முடித்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.1014/2015 பின்னர் தள்ளுபடியாகி விட்டது என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்களுக்கு இந்திய சாட்சிய சட்டத்தின் அடிப்படையில் நான் சான்று கொடுக்காத காரணத்தினால் அந்த ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. Tax Exemption என்பது வாதி நிறுவனத்திற்கு டைடல் பார்க்கால் கொடுக்கப்படவேண்டுமென்றும், அது எனக்கு கொடுக்கப்படவேண்டியதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வாதி 20-04-2015 தேதி அன்று ஈ-மெயில் மூலமாக எனது ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனது

எதிருரைக்கு வாதி தாக்கல் செய்த Reply statement ற்கு எதிராக நான் பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காலதாமதமாக வேலை செய்து வந்ததால் வாதிக்கு நிறைய நஷ்டம் ஏற்பட்டது என்றும், அதனால் நான்தான் வாதிக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. குறித்த நேரத்தில் வேலையை முடிக்காத காரணத்தினால் அலுலகம் நடத்தாமலேயே மாதத்திற்கு ரூ.2 1/2 லட்சம் வாடகையை வாதி செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு வாங்கி தரவேண்டிய அனைத்து அனுமதிகளையும் பெற்று தந்த பின்னர்தான் நான் வேலையை துவக்கினேன் என்று சொன்னால் சரியல்ல. டைடல்பார்க் நிறுவனத்திடமிருந்து அனுமதியை முறையாக சரியான நேரத்தில் வாதி நிறுவனம் பெற்று தந்தது என்று சொன்னால் சரியல்ல. கிளாஸ் டோர்ஸ், கன்சீல்டு ஏ.சி சிஸ்டம், அதற்கான சர்வீஸ் Ducts, Wall finishing, Interier Decration, Roof lights போன்ற எந்த வேலையையும் நான் செய்யவில்லை எ'று சொன்னால் சரியல்ல. அதனால் வாதியிடமிருந்து பெற்ற தொகைக்கு நான் சரியாக வேலை செய்யவில்லை என்றும், அதனால் நான்தான் வாதி நிறுவனத்திற்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை                sd/ சன் லாவண்யன்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,

Principal District Judge, Coimbatore.